நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, சங்ககிரி

முன்னிலை : திருமதி. எஸ்.சத்தியா, பி.ஏ., பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25- ஆம் நாள் புதன்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 12 / 2026

(CNR.No. TNSA09-000001-2026)

குற்றமுறையீட்டாளர்	-	அரசு தரப்பில் காவல் உதவி ஆய்வாளர், சங்ககிரி காவல் நிலையம், கு.எண். 16/2025
குற்றம் சாட்டப்பட்டவர்	-	தேவா, த/பெ. வடிவேல் க.எண்.29, கழுகுமேடு, ரிங் ரோடு, சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.
வனையப்பட்ட குற்றங்கள்	-	U/s. 281, 125(b) of BNS
குற்றம் நிகழ்ந்த நாள்	-	07.01.2025
தகவல் தெரிவிக்கப்பட்ட நாள்	-	11.01.2025
எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள்	-	21.02.2025
எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள்	-	21.02.2025(Station bail)
வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்	-	02.01.2026
எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள்	-	17.02.2026
சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள்	-	03.03.2026

சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள்	-	03.03.2026
பிரிவு.348 BNSS-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம்		Nil
பிரிவு 351 (1)(b) BNSS - இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்	-	17.03.2026
தலைமறைவு எதிரிகள் குறித்த விவரம்	-	Nil
நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம்	-	Nil
தீர்மானம்	-	எதிரி U/s. 281, 125(b) of BNS - ன் கீழ் குற்றவாளி
முடிவு	-	இறுதியாக, எதிரிமீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 281, 125(b) of BNS-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் எந்தவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவுசெய்து, எதிரி பிரிவுகள் 281, 125(b) of BNS-ன் கீழ் குற்றவாளியென தீர்மானித்து, எதிரிக்கு பிரிவு 281 of BNS பிரிவின் கீழான குற்றத்திற்கு ரூ.1000/- அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் இரண்டு வாரம் மெய்க்காவல் சிறைதண்டனையும், பிரிவு 125(b) of BNS பிரிவின் கீழான குற்றத்திற்கு ரூ.5000/-அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் ஒருமாதம் மெய்க்காவல் சிறைதண்டனையும்

	விதித்து பிரிவு 278(2) of BNSS -ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதம் ரூ. 6000/-. வழக்குச்சொத்து இல்லை.

இந்த வழக்கு 07.01.2026 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு.M.ராஜு அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,

தீர்ப்புரை

சங்ககிரி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையின் விவரம்:

2. 1) கடந்த 07.01.2025 - ஆம் தேதி 21.00 மணிக்கு சங்ககிரி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, சேலம் to சங்ககிரி மெயின் ரோட்டில் கெமிக்கல் பிரிவு ரிங் ரோட்டின் பிரிவு அருகே சாட்சி-2 சின்னராஜா கெமிக்கல் பிரிவு அக்கமாபேட்டைக்கு வேலை சம்மந்தமாக சென்று பார்த்துவிட்டு வீட்டுக்கு வர அவரது TN 52 A 0355 என்ற பதிவெண்கொண்ட Hero Honda splendor + இருசக்கர வாகனத்தில் அக்கமாபேட்டை புதிய ரிங் ரோடு பக்கமிருந்து வந்து கெமிக்கல் பிரிவு பக்கம் திரும்பும் போது சேலம் to சங்ககிரி நோக்கி வந்த எதிரி TN 52 AB 3678 என்ற

பதிவெண்கொண்ட NS 160 pulsar இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று சாட்சி-2 ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது பிரிவு 281 of BNS - ன் கீழும்,

2.2) மேற்படி அதே தேதி, அதே நேரம், அதே இடத்தில் வைத்து அதே சம்பவத்தின் போது, சாட்சி-2 க்கு கொடுங்காயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது பிரிவு 125 (b) of BNS - ன் கீழும் சங்ககிரி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் இந்நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், அவருக்கு பிரிவு 230 BNSS கீழ் இவ்வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசம் அளித்த பின்னர் எதிரியிடம் பிரிவுகள். 281, 125(b) of BNS - ன் கீழான குற்றச்சாட்டு குறித்து வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் சாராம்சம் பின்வருமாறு</u>** : -

4. 1) இவ்வழக்கில் புகார்தாரர் சாட்சியான அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 07.01.2025 ம் தேதி,இரவு சுமார் 09.00 மணியளவில் தனது தம்பி சின்னராஜா, வீட்டிற்கு வருவதற்காக தன்னுடைய Splendor plus இருசக்கர வாகனத்தில் அக்கமாபேட்டை ரிங் ரோட்டில் இருந்து கெமிக்கல் பிரிவிற்கு திரும்பும் போது சங்ககிரி நோக்கி வந்த பல்சர் இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாகவும்,

அவரை சங்ககிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்திருப்பதாக தனது நண்பர் தனக்கு தொலைபேசியின் மூலம் தகவல் சொன்னதாகவும், உடனே தான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது தனது தம்பிக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்ததாகவும், அவரை மேல்சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்ததாகவும், தனது தம்பி மயக்க நிலையில் இருந்ததால் போலீசார் மருத்துவமனை வந்து தன்னிடம் புகார்வாக்குமூலம் (**அ.சா.ஆ.1**) பெற்று சென்றனர் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

4.2) அ.சா.3 திரு.அருண்குமார் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் தனது சாட்சியத்தில், இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு. கண்ணன் அவர்கள் பணிமாறுதலில் சென்றுவிட்டதால், அவரின் கையொப்பம் தனக்கு நன்கு பரீட்சையம் என்பதால் அவருக்கு பதிலாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 11.01.2025 ம் தேதி, 15.00 மணிக்கு சங்ககிரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக திரு.கண்ணன் அவர்கள் பணிபுரிந்தபோது முன்னதாக சங்ககிரி அரசு மருத்துவமனை மற்றும் கோவை கங்கா மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற சின்னராஜா என்பவரின் RTA தகவலின் பேரில், கோவை கங்கா மருத்துவமனை சென்று பார்த்தபோது சின்னராஜா மயக்க நிலையில் இருந்ததால் உடனிருந்த அவரது அண்ணன் சக்திவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் பேரில் சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.16/2025, சட்டப்பிரிவுகள் 281, 125(a) of BNS-

ஆகிய பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை (**அ.சா.ஆ.2**) பதிவு செய்துள்ளார் என்றும்,

4.3) பின்னர், அன்றைய தினமே மாலை சுமார் 04.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சந்தோஷ் மற்றும் ரங்கதுரை ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் (**அ.சா.ஆ.4**) வரைந்து பார்வை மகஜர் (**அ.சா.ஆ.3**) தயார் செய்து சாட்சிகள் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும்,

4.4) பின்னர், சாட்சிகளை விசாரணை செய்ததில் எதிரி தனது இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து மோதி விபத்தை ஏற்படுத்தியது உண்மையென தெரிந்து எதிரியை தேடிவந்த நிலையில் கடந்த 21.02.2025 ஆம் தேதி, பிற்பகல் சுமார் 12.15 மணிக்கு சங்ககிரி காவல் நிலையம் முன்பு வைத்து எதிரியை கைது செய்து தக்க இருநபர் நிலைய பிணையில் விடுவித்துள்ளார் என்றும்,

4.5) பின்னர், இவ்வழக்கு விபத்தில் ஈடுபட்ட வாகனங்களை வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்து, பின்னர், வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பவரை கடந்த 20.05.2025 - ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கைகளை (**அ.சா.ஆ.5, அ.சா.ஆ.6**) பெற்றதாகவும்,

4.6) பின்னர், அன்றைய தினமே, விபத்தில் காயமடைந்த சின்னராஜா என்பவருக்கு சிகிச்சை அளித்த கோவை கங்கா மருத்துவமனை மருத்துவர் திரு.குமணன், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து சின்னராஜா என்பவரின் விபத்து பதிவேட்டு அறிக்கை (**அ.சா.ஆ.7**) மற்றும் காயச்சான்றிதழ் (**அ.சா.ஆ.8**) ஆகியவற்றை பெற்றதாகவும்,

4.7) பின்னர், சின்னராஜா என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என மருத்துவர் காயச்சான்று வழங்கியதால் அன்றைய தினமே, இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் 281, 125(a) of BNS-பிரிவிலிருந்து சட்டப்பிரிவுகள் 281, 125(b) of BNS- பிரிவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (**அ.சா.ஆ.9**) தயார்செய்ததாகவும், அத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 281, 125(b) of BNS- ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதிஅறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவடைந்த பிறகு எதிரிக்கு பாதகமாக தோன்றக் கூடிய அம்சங்கள் குறித்து பிரிவு 351(1)(b) of BNSS -ன் கீழ் தொகுத்து வினவிய போது எதிரி அதனை மறுத்தார். எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

தீர்மானிக்கப்படவேண்டிய விசயம்

6. தற்பொழுது இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

7. அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் 9 வரையிலான ஆவணங்கள் குறியீடும் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் பட்டியல் சாட்சிகளான 2, 4 முதல் 8 வரையானவர்கள் அரசு தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கரவு செய்யப்பட்டுள்ளார்கள். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

விவாதம், தீர்வு மற்றும் தீர்வுக்கான காரணம்:

8. இருதரப்பும் கேட்கப்பட்டது வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

9. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், அரசுதரப்பு தன் வழக்கினை மெய்ப்பித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு தண்டணை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. மாறாக எதிரி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தம்முடைய வாதத்தில் இந்த விபத்திற்கான காரணம் சாட்சி-2 ன் அஜாக்கிரதை தான் என்றும், எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும், எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. இவ்வழக்கில் புகார்தாரர் சாட்சியாக அ.சா.1-ம், கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2-ம், புலன் விசாரணை அதிகாரி அ.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

12. 1) எதிரி மீதான பிரிவுகள் 281,125(b) of BNSS - ன் கீழான குற்றம் குறித்து பரிசீலிக்கும்போது, அரசு தரப்பு வழக்கின்படி, கடந்த 07.01.2025 - ஆம் தேதி 21.00 மணிக்கு சங்ககிரி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, சேலம் to சங்ககிரி மெயின் ரோட்டில் கெமிக்கல் பிரிவு ரிங் ரோட்டின் பிரிவு அருகே சாட்சி-2 சின்னராஜா கெமிக்கல் பிரிவு அக்கமாபேட்டைக்கு வேலை சம்மந்தமாக சென்று பார்த்துவிட்டு வீட்டுக்கு வர அவரது TN 52 A 0355 என்ற பதிவெண்கொண்ட Hero Honda splendor + இருசக்கர வாகனத்தில் அக்கமாபேட்டை புதிய ரிங் ரோடு பக்கமிருந்து வந்து கெமிக்கல் பிரிவு பக்கம் திரும்பும் போது சேலம் to சங்ககிரி நோக்கி வந்த எதிரி TN 52 AB 3678 என்ற பதிவெண்கொண்ட NS 160 pulsar இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று சாட்சி-2 ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி, சாட்சி2-க்கு கொடுங்காயங்களை ஏற்படுத்தினார் என்பதாகும்.

12. 2) அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் கடந்த 07.01.2025 - ஆம் தேதி 21.00 மணிக்கு சங்ககிரி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, சேலம் to சங்ககிரி மெயின் ரோட்டில் கெமிக்கல் பிரிவு ரிங் ரோட்டின் பிரிவு அருகே சாட்சி-2 சின்னராஜா கெமிக்கல் பிரிவு அக்கமாபேட்டைக்கு வேலை சம்மந்தமாக சென்று பார்த்துவிட்டு வீட்டுக்கு வர அவரது TN 52 A 0355 என்ற பதிவெண்கொண்ட Hero Honda splendor + இருசக்கர வாகனத்தில் அக்கமாபேட்டை புதிய ரிங் ரோடு பக்கமிருந்து வந்து கெமிக்கல் பிரிவு பக்கம் திரும்பும் போது சேலம் to சங்ககிரி நோக்கி வந்த எதிரி TN 52 AB 3678 என்ற பதிவெண்கொண்ட NS 160 pulsar இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றுள்ளதும், அப்போது விபத்து ஏற்பட்டுள்ளதும் நிரூபணமாகியுள்ளது.

12.3) இவ்வழக்கு விபத்து சம்பந்தமாக கடந்த 11.01.2025 - ஆம் தேதி சாட்சி-2 கோவை கங்கா மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது அ.சா.1-யிடம் சங்ககிரி போலீசார் புகார் வாக்குமூலம் பெற்றுச்சென்றுள்ளது அ.சா.ஆ-1 மூலமும், மேற்படி புகார் வாக்குமூலத்தின் பேரில் காவல் உதவி ஆய்வாளர் திரு.கண்ணன் அவர்கள் அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதும், பின்னர் அன்றையதினமே சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் (அ.சா.ஆ.3) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.4) தயார்செய்துள்ளதும், வழக்கில் கண்ட வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கைகள் (அ.சா.ஆ-5, அ.சா.ஆ-6) பெறப்பட்டுள்ளதும், இவ்வழக்கு விபத்தில் காயமடைந்த சின்னராஜா என்பவருக்கு

கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளது அ.சா.ஆ.7 விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் அ.சா.ஆ.8 காயச்சான்றிதழ் மூலமும், சாட்சி-2 க்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று மருத்துவர் சான்றிதழ்கள் வழங்கியுள்ளதால் சட்டப்பிரிவு மாறுதல் செய்துள்ளது அ.சா.ஆ.9 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார்செய்துள்ளதும் அ.சா.3-ன் சாட்சியத்தின் மூலமும் நிரூபணமாகியுள்ளது. மேலும் மேற்படி விபத்தானது இயந்திர கோளாறுகளினால் ஏற்படவில்லை என்பது மேற்கண்ட வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் மூலம் நிரூபணமாகியுள்ளது.

12. 4) மேற்படி விபத்தின் மூலம் சாட்சி-2 க்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது நிரூபணமாகியுள்ள நிலையில், மேற்படி விபத்தை எதிரி தனது வாகனத்தை அதிவேகமாவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று ஏற்படுத்தினாரா என்று பரிசீலிக்கும்போது, கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 07.01.2025 ம் தேதியில் தானும் தனது மனைவியும் சேலத்தில் இருந்து வீட்டிற்கு செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது, சின்னராஜா என்பவர் வீட்டிற்கு வருவதற்காக அவரது splendor plus இருசக்கர வாகனத்தில் அக்கமாபேட்டை ரிங் ரோட்டில் இருந்து கெமிக்கல் பிரிவிற்கு திரும்பும் போது, சங்ககிரி நோக்கி வந்த பல்சர் இருசக்கர வாகனம் வேகமாக வந்து அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், விபத்தில் Splendor plus இருசக்கர வாகனத்தில் வந்தவருக்கு வலது காலில் பலத்த காயம் ஏற்பட்டுவிட்டதாகவும், பின்னர்

இருசக்கர வாகனங்களில் வந்த இருவரும் கீழே விழுந்துவிட்டதாகவும், அவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், ஆஜர் எதிரி தான் பல்சர் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் என்றும் சாட்சியமளித்துள்ளார். எதிரி தரப்பிற்கு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. மேலும் அ.சா.1-ன் சாட்சியத்தை உறுதியூட்டும் விதமாகவே அ.சா.2-ன் சாட்சியம் அமைந்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

12.5) எனவே மேற்படி பரிசீலனையிலிருந்து எதிரி சம்பவத்தன்று மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று சாட்சி-2 ன் மீது மோதி விபத்து ஏற்பட காரணமாக இருந்து சாட்சி-2 - க்கு கொடுங்காயங்களை ஏற்படுத்தியுள்ளார் என்பது சந்தேகத்திற்கிடமின்றி இவ்வழக்கில் அரசுதரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13. இறுதியாக, எதிரிமீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 281, 125(b) of BNS-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் எந்தவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவுசெய்து, எதிரி பிரிவுகள் 281, 125(b) of BNS-ன் கீழ் குற்றவாளியென தீர்மானித்து, எதிரிக்கு பிரிவு 281 of BNS பிரிவின் கீழான குற்றத்திற்கு ரூ.1000/-அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் இரண்டு வாரம் மெய்க்காவல் சிறைதண்டனையும், பிரிவு 125(b) of BNS பிரிவின் கீழான

குற்றத்திற்கு ரூ.5000/- அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் ஒருமாதம் மெய்க்காவல் சிறைதண்டனையும் விதித்து பிரிவு 278(2) of BNSS -ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதம் ரூ. 6,000/-. வழக்குச்சொத்து இல்லை.

எதிரி பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்து, இன்று 25.03.2026 - ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

SATHIYA S Digitally signed by SATHIYA S Date: 2026.03.25 19:14:31 -0100

நீதித்துறை நடுவர் எண்.1,
சங்ககிரி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:-

அ.சா.1	சக்திவேல், புகார்தாரர் சாட்சி
அ.சா.2	வைரவேல், கண்ணுற்ற சாட்சி
அ.சா.3	திரு.அருண்குமார், காவல் உதவி ஆய்வாளர்

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>:

அ.சா.ஆ.1	11.01.2025	புகார்வாக்குமூலம்
அ.சா.ஆ.2	11.01.2025	முதல் தகவல் அறிக்கை
அ.சா.ஆ.3	11.01.2025	பார்வை மகஜர்

அ.சா.ஆ.4	11.01.2025	மாதிரி வரைபடம்
அ.சா.ஆ.5	06.03.2025	TN 52 AB 3678 என்ற பதிவெண்கொண்ட வாகனத்தின் ஆய்வறிக்கை.
அ.சா.ஆ.6	15.05.2025	TN 52 A 0355 என்ற பதிவெண்கொண்ட வாகனத்தின் ஆய்வறிக்கை.
அ.சா.ஆ.7	08.01.2025	விபத்து பதிவேட்டு அறிக்கை.
அ.சா.ஆ.8	10.02.2025	காயச்சான்றிதழ்
அ.சா.ஆ-9	20.05.2025	சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை.

சான்றுப்பொருள் : இல்லை.

எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

குறிப்புகள்:

1) விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்துள்ளார்.

2) வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்தப்படவில்லை.

3) வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

SATHIYA S

Digitally signed by SATHIYA S
Date: 2026.03.25 19:14:40 -0100

நீதித்துறை நடுவர் எண்.1,

சங்ககிரி.

JUDICIAL MAGISTRATE NO.I COURT, SANKARI
PRESENT: TMT.S.SATHIYA, B.A.,B.L.,
JUDICIAL MAGISTRATE NO.I, SANKARI
CASE SUMMARY
CC-12/2026, Cr.No. 16/2025, SANKARI POLICE STATION
CNR.No.TNSA-09-000001-2026

S.No	Particulars	Purpose
i	The period of remand of the accused	The accused was station bail
ii	The date of filing of the Complainant/Final report in the Court	02.01.2026
iii	The date of Committal of the case to the Court of Session	NIL
iv	The date of questioning of the accused as the case may be	17.02.2026
v	Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions under Section 317 of the Code	NIL
vi	Date of Examination in-chief and cross-examination of a witness	PW1, PW2 were Chief examined on 03.03.2026
		PW3 was Chief examined on 03.03.2026
vii	Date of examination of the accused under section 313 of the Code	17.03.2026
viii	Details of abscondence of an accused and his appearance/production, as the case may be;	NIL
ix	Grant of stay by superior Courts and the results thereof	NIL

SATHIYA S
Digitally signed by SATHIYA S
Date: 2026.03.25 19:14:48 -0100

Judicial Magistrate No.I,
Sankari

JUDICIAL FORM NO. 61

(Rule 106 of Crl.R.P)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, SANKARI

JUDGMENT IN CC.NO. 12/2026

Complainant : காவல் உதவி ஆய்வாளர், சங்ககிரி காவல்நிலையம்.

Accused : தேவா

Offence : U/Sec. 281, 125(b) of BNS

Finding : எதிரி U/Sec. 281, 125(b) of BNS ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டது.

Sentence : எதிரிக்கு பிரிவு 278(2) of BNSS – ன் கீழ் அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

Serial Number	Description of the accused					
	Name	Father's Name	Caste or Religion	Occupation	Residence	Age
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	தேவா	வடிவேல்	இந்து	Labourer	க.எண்.29, கழுகுமேடு, ரிங் ரோடு, சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.	27

Date of							Explanation of delay
Occurrence	Complaint	Apprehension of appearance	Released on bail	Commencement of trial	Close of trial	Sentence or order	
(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)
07.01.2025	11.01.2025	21.02.2025	21.02.2025 (Station bail)	03.03.2026	03.03.2026	25.03.2026	-

SATHIYA S

Digitally signed by SATHIYA S
Date: 2026.03.25 19:15:01 -0100

நீதித்துறை நடுவர் எண்.1,

சங்ககிரி.